அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு மார்கழி – தை ஜனவரி 2019 முரசு 12 ஒலி 139



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

# வடலூரில் தரிசிக்க வேண்டிய இடங்கள்

வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே - திருஅருட்பா



வள்ளல் பெருமான்
வருவிக்கவுற்ற இல்லம்
(05-10-1823)




வள்ளல் பெருமான் தண்ணீரால்
விளக்கெரித்த இல்லம்
(1858 - 1867)




சத்திய தருமசாலை
(23-05-1867)

அணையா
அடுப்பு
23.05.1867





சத்திய ஞானசபை
(25-01-1872)



தீஞ்சுவை நீரோடை



சித்திவளாகத் திருமாளிகை
(1870 - 1874)

திருக்காப்பிட்டுக்
கொண்ட
திருவறை
(1874)





# திருச்செவிக்கு விண்ணப்பம்

– திருஅருட்பா வசனபாகம்

களைப்பறிந்து உதவும் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் “நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளினின்றும் நீக்கிக் களைப்பும் கலக்கமும் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோம்” என்றும் “அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருணம்” என்றும் “அப்பதியினிடத்தே யாம் அருள்நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டும்” என்றும் திருவருட் குறிப்பால் அறிவித்ததுமன்றி, அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளுமின்றி அத்திருஞானசபையும் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படைகின்றோம். இனி அத்திருஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணம் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! அத்திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியார்களாக்கி உண்மை அறிவை விளக்கி உண்மை இன்பத்தை அளித்து சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்து சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்கங்களும் வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!

*திருச்சிற்றம்பலம்*

# சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை

**ஸ்ரீ** பார்வதிபுரம் என்னும் உத்தரஞான சிதம்பரத்தின் கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைமைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ்ஜோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யானெனும் போத நாச வந்தனம் செய்த விண்ணப்பம்.

எம் இறையவரே! இது பரியந்தம் யானாகத் தேடியதோர் பொருள் என்பது இல்லை. ஆகவே, தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக்கொள்ள உபகரித்தருளிய உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்டதோர் சுதந்திரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றியிருந்து ஒன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன். ஆதலால் அச்சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால் அத்தற்சுதந்திரப் பொருளைத் தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னை அடுத்த சுற்றமும் என்னோடு பழகிய நட்பினராதியரையும் உய்யக் கொண்டருளுக.

**ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.**

– திருஅருட்பிரகாச வள்ளலார்

*திருச்சிற்றம்பலம்*




# சமரச சுத்த சன்மார்க்கம்

“இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும் பெற்றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே”

– திருஅருட்பா

**மா**னுட ஜீவன் எல்லாக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்டு தனக்கே உரிய அழிவற்ற பேரானந்த நிலையையும், அமைதியையும் அடையவேண்டும் என்ற உன்னத லட்சியத்தை மனித சமுதாயத்திற்கு உணர்த்த வந்ததே **சமரச சுத்த சன்மார்க்கம்**. இஃது இத்தகைய பேறுபெற்ற உயரிய சித்தி நிலையை அடையப் போராடும் ஜீவனின் முயற்சிகளுக்கு இடையூறாக உள்ள ஒரு பெருந்தடையைப்பற்றி உரைக்கிறது.

மனிதனின் ஆன்மாவை தன் பிடியில் சிக்க வைத்து, அவன் வாழ்வை நெருக்கியும், குறுக்கியும் செய்து, அவனை நிராதரவாக்கி, அளப்பரிய வேதனையில் வீழ்த்தும் இந்தப் பிணிதான் என்ன?

இதுவே 'நான்' என்ற தனிப்பட்ட உணர்வில் துவங்கி, சரீரமே 'நான்' என்று அதன் மேல் கொள்ளும் பற்றும், இந்தச் சரீரத் தொடர்பினால் ஏற்பட்ட உற்றம், சுற்றம், நட்பு, லோகாயதமான நன்றிக் கடனுக்குரியோர் ஆகியோர்பால் கொள்ளும் பாசமும், பற்றுதலுமேயாகும்.

இத்தகைய பந்தபாசம் மனிதனின் சிந்தனையைக் குறுக்கி இச்சரீரத்துடன் தொடர்பு கொண்ட சுற்றத்தினரின் நலன் மட்டுமே கருதி, மனித வாழ்க்கையை ஒரு சிறிய வட்டத்திற்குள் ஒடுக்கிவிடுகிறது.

இந்நிலையில் மனிதனின் கண்ணோட்டம் 'நான்' என்ற மையத்தில் துவங்கி, இதன் எல்லைக்குள் சுழன்று அமிழ்ந்து, இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட உலகத்தையும், மனித சமுதாயத்தையும் ஜாதி, சமயம், மதம், இனம், மொழி, நிறம் என்று தன்னிடமிருந்து பலவகையிலும் வேறுபட்ட அன்னியர்களாகக் கருதி ஒதுக்கிவிடுகின்றது. இந்தக் குறுகிய மனப்பான்மையே பயத்திற்கும், துக்கத்திற்கும் மூலகாரணம் என்பதை விளக்க வந்ததே சுத்த சன்மார்க்கம்.

ஒருவனின் கண்ணோட்டம் பரந்து விரிந்து எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் காணும்போதுதான் உண்மையான மகிழ்ச்சியும், சுதந்திரமும் பெருகுகின்றன. 'நான்' என்ற அகந்தையால் எழுப்பப்பட்ட கோட்டைச் சுவர்களுக்குள் சிறைப்பட்டிருப்பதை மனிதன் உணர்ந்து இந்தச் சுவர்களை தகர்ப்பதினாலேயே விடுதலை கிட்டும் என்பதை அறிந்தபோதிலும், பந்தபாசம் அவனைச் செயலற்றவனாக்கி அவன் மேற்கொள்ளும் முயற்சிகளை வீணாகும்படி செய்துவிடுகின்றது. இத்தகைய பற்றுதல், பரநலப் பண்பு மேவிய ஒரு தீரனையும் தளர்வடையச் செய்கிறது. இவ்வாறு ஆன்மீகப் பாதையில் முன்னேற விழையும் ஜீவனின் பரநலப் போக்கையும் அதன் விளைவுகளையும் இந்த ஆசை எனும் மோகம் கட்டுப்படுத்துகிறது.

பந்த பாசங்களால் அலைக்கழிக்கப்பட்டு சுயநலம், பேராசை, காமம் முதலியவற்றின் பிடியில் சிக்குண்டு தன்னையும் தன் சுற்றத்தையும் மையமாகக் கொண்டு நடத்தும் வாழ்வினால் ஜீவனுக்கு ஞானக்கண்ணின் கதவுகள் அடைக்கப்பட்டு மனித வாழ்வின் மிக உன்னத லட்சியமாகிய ஆன்ம லாபமும் மறுக்கப்படுகிறது.

ஆன்மீக விடுதலைக்காக முயலும் ஒவ்வொருவர் வாழ்விலும் கடைந்தெடுத்த சுயநலப் போக்கிற்கும், பரநலக் குறிக்கோளுக்குமிடையே ஒருபெரும் போராட்டமே நிகழ்கிறது. ஒரு மாபெரும் செயலைப் புரிவதற்காகவே பிறந்து அதற்காகவே தன்னை தயார் செய்து கொண்ட ஒரு சாதகன்கூட கீழான நிலையற்ற மனக் கிளர்ச்சியால் அழுந்தப்பட்டு உலக மகத்துவம் வாய்ந்த அந்த உயரிய பணியை கைவிட முயற்சிக்கிறான். அவனது பரநல லட்சியமும் அதன் செயல்களும் அகங்கார உணர்ச்சியால் சூழப்பட்டு வீழ்த்தப்படுகிறது.

இத்தகைய கீழான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? இப்படிப்பட்ட ஒருவன் செயலற்ற நிராதரவான நிலையில் அழுந்தப்பட்டு பயம், சந்தேகம், வேதனை முதலியவற்றால் பீடிக்கப்பட்டு ஆனந்தம், சுதந்திரம் முதலியவற்றை இழந்து தவிக்கிறான்.

இறைவன் மீது நாட்டம் கொண்ட ஜீவன் உயர்நிலைக்கு ஏறும்போது அகந்தையானது தன்னைக் காப்பாற்றி நிலைநிறுத்திக் கொள்வதற்காக "பற்று நிறைந்த வாழ்வே உண்மையான வாழ்வு; ஜீவன் கடை நிலையிலிருந்து உயர் நிலைக்கு மேவும் முயற்சிகள் விரும்பத்தகாதவை; அவை தீவினை பயக்கும்" என்பது போன்ற போலியானவற்றைப் பறை சாற்றுகிறது.

ஆன்மீக விடுதலையில் ஆர்வம் கொண்ட அனேக சாதகர்கள் பாசமும் பற்றுமே பெருந்தடை எனவும், அதன் பிடியிலிருந்து விரைவில் விடுபட்டால்தான் நலமாகும் என்பதையும் நன்றாக உணர்ந்துள்ளனர். ஆனால் பற்றானது ஜீவனைக் கைப்பற்றி செயலற்றவனாக்கி வீழ்த்தியுள்ள நிலையில் அவன் எவ்வாறு அதன் பிடியிலிருந்து தப்பமுடியும்? அழிவற்ற பேரானந்த நிலையை அடைய தீனக்குரல் எழுப்புகின்றானே! அந்தோ பரிதாபம். இது கூண்டில் சிறைபட்டு சுதந்திரத்திற்காகப் போராடும் காட்டுப் பறவையை ஒத்திருக்கிறது.

பற்றானது புத்தியை திரித்து ஊற்றெடுக்கும் உணர்ச்சிகளை விஷமாக்கி மனோதிடத்தை அறவே தகர்க்கிறது. சுருங்கக் கூறின் பற்று ஜீவனை காரிருளிலும், மயக்கத்திலும் ஆழ்த்தி மாயை என்னும் ஜாலத்தினால் உன்னதமான சுதந்திரமான பேரின்பமான தெய்வீகமான நிலையைப் பற்றிய உணர்வே இல்லாதவனாய் செய்துவிடுகின்றது. இவ்வாறு பந்தத்தால் கைப்பற்றபட்டு ஒடுக்கப்பட்ட ஜீவன் அறியாமையில் உழன்று கவலை, துக்கம், திகைப்பு முதலியவற்றை அனுபவித்து அந்த வட்டத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறது.

வாழ்வில் அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுபகுணங்களைப் பெற்று வாழவிடாமல் மிருகநிலைக்கும் கீழாக தள்ளிவிடுகின்றது. 'சாத்தான் வேதம் ஓதுகிறது' என்ற பழமொழியை நாம் கேட்டிருப்போம். அதுபோல் பற்றும் அகங்காரமும் நம்மை தர்மநீதிக்கு எதிராகச் செலுத்துகின்றது.

உண்மையில் அகங்காரத்தில் தோன்றிய சுயநலப் பற்றினால் ஒரு செயலை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோதான் பாவச் செயலாகும். எல்லா பாவங்களுக்கும் அகங்காரமே மூலகாரணம். பற்று அகங்காரத்தின் கொடிய ஆயுதமாகும். இவை இரண்டும் சேர்ந்து மனிதனின் வாழ்வில் துக்கத்தையும், கலக்கத்தையும் தோற்றுவிக்கின்றன.

உயிர்கள் படும் இவ்வல்லல்களை தீர்த்து எல்லா உயிர்களும் இன்புற்று வாழவே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவாரால் வருவிக்கவுற்ற நம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் வாழ்வின் கோட்பாடுகளையும், ஒழுங்குமுறைகளையும் கிரமமாக வகைப்படுத்தி சமரச சுத்த சன்மார்க்கமாக அருளியுள்ளார். இவற்றை பின்பற்றுவதின் மூலம் மனிதன் அகங்காரத்தையும், பற்றுதலையும் வென்று விவரிக்க இயலாத அதி உன்னத தெய்வீக நிலையை அடைவதுடன்கூட, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று இம்மனிதப் பிறப்பின் பேற்றினை அடைந்து வாழலாம் என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

# சுத்த சன்மார்க்கக் கொள்கை

ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யான்அடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே – வள்ளலார்

சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி அணுக்கள் தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக் கொண்ட மூர்த்திகளாகியவர் ஒரு தொழிலுடைய பிரம்மாவும், இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும், மூன்று சித்தியுடைய ருத்திரனும் இது போன்ற மற்றையர்களும்.

மேற்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவசித்திக் கற்பனைகளாகிய சமய மத மார்க்கங்களை அனுஷ்டித்து அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி வழிபாடு செய்துவருகின்ற இது வரையிலும் உள்ள அணுக்கள் மேற்குறித்தவர்களது பதப்பிராப்தியை மேற்படி அணுக்கள் லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்கு உள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியை உடைய கடவுளுக்கு கோடிகோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கின்றார்கள். ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியை பெற்று அதில் மகிழ்ந்து அகங்கரித்து மேல் படிகள் ஏற வேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை அடையாமல் தடைபட்டு நிற்றல்போல் இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல் **சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவர் உண்டென்றும் அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை.**

மேலும் தனித்தலைவன் லக்ஷியம் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை அல்ல. உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேற்குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

இதற்குப் பிரமாணம் "சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன்" என்னும் திருஅருட்பாசுரத் திருஉள்ளக் கிடையானும், "அறங்குலவு தோழி இங்கே" என்னும் அருட்பாசுர உள்ளக்கிடையானும் பெரும்பதி தெரிவித்தார்.

இதன்றி, திருக்கதவந் திருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில் "**இதுகாறும் என்னோடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில் இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்**" என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக உடையது கடமை.

## சுத்த சன்மார்க்க விளக்கத்தின் முதற் சாதனமாகிய

# ஜீவகாருண்ய ஒழுக்கம்

உலகத்தில் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்தப் பிறப்பினால் அடையத் தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக் காலமுள்ள பொழுதே விரைந்து அறிந்து அடைய வேண்டும்.

**அந்தத் தலைப்பட்ட ஆன்ம இன்ப வாழ்வு எத்தனை வகை?** என்று அறிய வேண்டில்;

*1. இம்மை இன்ப வாழ்வு, 2. மறுமை இன்ப வாழ்வு, 3. பேரின்ப வாழ்வு என மூன்று வகையென்று அறிய வேண்டியது.*

## 1. இம்மை இன்ப வாழ்வு

அவற்றுள் சிறிய தேக கரணங்களைப் பெற்றுச் சிறிய முயற்சியால் சிறிய விடயங்களைச் சிலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை இம்மை இன்ப வாழ்வு என்று அறிய வேண்டும்.

## இம்மை இன்ப லாபமாவது:

மனிதப் பிறப்பில் தேகத்திலும், கரணங்களிலும்; புவனத்திலும், போகங்களிலும் குறைவின்றி நல்ல அறிவுடையவர்களாய் பசி, பிணி, கொலை முதலிய தடைகளில்லாமல் உறவினர், சினேகர், அயலார் முதலியருந் தழுவ சந்ததி விளங்கத்தக்க சற்குணமுள்ள மனைவியோடு விடயங்களைச் சிலநாள் அனுபவிக்கின்றதை இம்மை இன்ப லாபம் என்றறிய வேண்டும்.

**இம்மை இன்பத்தை அடைந்தவர் பெருமை எது?** என்று அறிய வேண்டில்:

அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுப குணங்களைப் பெற்று விடய இன்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ்பட வாழ்தலென்று அறிய வேண்டும்.

## 2. மறுமை இன்ப வாழ்வு

உயர் பிறப்பில் பெரிய தேக கரணங்களைப் பெற்றுப் பெரிய முயற்சியால் பெரிய விஷயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமை இன்ப வாழ்வு என்று அறிய வேண்டும்.

**மறுமை இன்ப லாபம் எது?** என்னில்;

உயர்பிறப்பைப் பெற்று இம்மை இன்பலாபத்தில் குறிக்கப்பட்ட நற்குணங்களெல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்த விடயங்களைப்

பலநாள் அனுபவிக்கின்ற இன்பலாபத்தை மறுமை இன்ப லாபம் என்று அறிய வேண்டும்.

**மறுமை இன்ப லாபத்தை அடைந்தவர் பெருமை யாது?** என்று அறிய வேண்டில்;

அன்பு, தயை முதலிய சுப குணங்களைப் பெற்றுச் சுத்த விடய இன்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பலநாள் அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் என்று அறிய வேண்டும்.

3. பேரின்ப வாழ்வு

எல்லாத் தேகங்களையும், எல்லாக் கரணங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் போகங்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால் தோன்றி விளங்க விளக்கம் செய்கின்ற பூரண இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் அனுபவிக்கப்படுகின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்ப வாழ்வு என்று அறிய வேண்டும்.

**பேரின்ப லாபம் யாது?** எனில்: யாவும் தாமாய் விளங்குவதே.

**இம்மூவகை இன்ப லாப வாழ்வையும் எதனால் பெறக்கூடும்?** என்று அறிய வேண்டில்;

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும் அருட் பூரணத்தைக் கொண்டும் அடையக்கூடும் என்று அறிய வேண்டும்.

**மூவகை இன்பங்களில் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையத் தக்கவை எவை? அருட் பூரணத்தைக் கொண்டு அடையத்தக்கது யாது?** என்று அறிய வேண்டில்;

இம்மையின்ப லாபம், மறுமையின்ப லாபம் என்கிற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக் கூடுமென்றும்; பேரின்ப லாபமென்கின்ற ஒன்றை அருட் பூரணத்தைக் கொண்டு அடையக் கூடுமென்றும் அறிய வேண்டும்.

**அந்த அருளை எதனால் பெறக்கூடும்?** என்று அறிய வேண்டில்:

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் பெறக்கூடும் என்று அறிய வேண்டும்.

**ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் அருளைப் பெறக்கூடும் என்பது எப்படி?** என்று அறிய வேண்டில்:

அருள் என்பது கடவுள் இயற்கை விளக்கம் அல்லது கடவுள் தயவு. ஜீவகாருண்யம் என்பது ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் அல்லது ஆன்மாக்களின் தயவு. இதனால், ஒருமைக் கரணமாகிய சிறிய விளக்கத்தைக்

கொண்டு பெரிய விளக்கத்தைப் பெறுதலும், சிறிய தயவைக்கொண்டு பெரிய தயவைப் பெறுதலும் கூடும். சிறு நெருப்பைக் கொண்டு பெருநெருப்பைப் பெறுதல்போல என்றறியவேண்டும்.

**இதனால் ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கம் என்று அறியப்படும்:** ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக விளங்கும்; அதனால், உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தியால், எல்லா நன்மைகளும் தோன்றும்.

ஜீவகாருண்யம் மறையும்போது, அறிவும் அன்பும் உடனாக நின்று மறையும்; அதனால் உபகாரசத்தி மறையும், உபகாரசத்தி மறையவே, எல்லாத் தீமைகளுந் தோன்றும். ஆகலின், புண்ணியமென்பது ஜீவகாருண்யம் ஒன்றே யென்றும், பாவமென்பது ஜீவகாருண்யமில்லாமை யொன்றே யென்றும் அறிய வேண்டும். அன்றி ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும் அதனால் வரும் இன்பமே கடவுள் இன்பம் என்றும், இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகாலறிந்து அடைந்து அனுபவித்து நிறைவுபெற்ற சாத்திய ஞானிகளே மேற்குறித்த பேரின்ப லாபத்தைப் பெற்ற முத்தர்களென்றும், அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயமானவர்கள் என்றும் சத்தியமாக அறியவேண்டும்.

**ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் இலக்கணம் என்ன?** *என்று அறிய வேண்டில்:*

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயத்தில் பொதுவாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

**ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்வது எப்படி?** *என்றறிய வேண்டில்:*

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம்-காருண்யம் உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்; அத்திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். அவ்வனுபவம் பூரணமாதலே கடவுள் வழிபாடு என்று அறிய வேண்டும்.

**ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்படுவது எப்படி?** *என்றறிய வேண்டில்:*

தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக உண்டாக அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவதுபோல், வெளிப்படுமென்று அறியவேண்டும்.

**திருவருள் விளங்குவதனால் கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாவது எப்படி?** என்றறிய வேண்டில்:

வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாவதுபோல, கடவுள் இன்பம் பூரணமாகு மென்றறிய வேண்டும்.

**ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது வெளிப்படும்?** என்றறிய வேண்டில்:

பசி, கொலை, பிணி, ஆபத்து, தாகம், பயம், இன்மை, இச்சை இவைகளால் ஜீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதும், கேட்ட போதும், அறிந்தபோதும், ஆன்ம **உருக்கம் உண்டாகு** மென்றறிய வேண்டும்.

**ஜீவகாருண்யத்தின் வல்லபம் யாது?** என்று அறிய வேண்டில்;

பிற உயிர்களிடத்துப் பசி, கொலை முதலியவற்றுள் எதனால் காருண்யம் தோன்றியதோ அதனால் அவ்வுயிர் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபம் என்று அறிய வேண்டும்.

**ஜீவகாருண்யத்தின் பிரயோஜனம் யாது?** என்று அறியவேண்டில்;

உயிர்களுக்கு இன்பம் உண்டுபண்ணுவது அதன் பிரயோஜனம் என்று அறிய வேண்டும்.

மனித தேகம் மற்ற ஜீவதேகம் போல இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும், மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம் வரும் என்கிற நிச்சயமில்லாமையாலும், இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், இந்த மனித தேகம் மாத்திரமே முதல் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற ஜீவகாருண்ய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்க வேண்டும் என்றும் கடவுள் விதித்திருக்கின்றபடியால் பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற ஜீவகாருண்ய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டும் என்றும் அறிய வேண்டும்.

பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச்சிவமே – அகவல்

திருச்சிற்றம்பலம்

# ஜீவகாருண்யமும் சித்தியும்

நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினால் அல்லது வேறு வகையில் அடைவது அரிது. இவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையில் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு.

இந்த ஜீவகாருண்யம் உண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில் கடவுளுடைய பெருமையையும் தரத்தையும், நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கும் சித்தியடைவதற்கும் முதற்படியாய் இருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

# ஆன்ம இயற்கையாகிய தயாமூல தர்மம்

தர்மம் என்பதற்குப் பொருள் ஜீவ தர்மம், குலதர்மம், சாஸ்திர தர்மம், ஆசார தர்மம், ஆசிரம தர்மம், சாதி தர்மம் முதலியவாக விரியும். இதில் அதி நுண்மை அதின் தன்மை... தன்மை என்பது அதின் சுபாவம். சுபாவமென்பது இயற்கைக் குணம். தயை என்பது ஆன்மா. ஆதலால், ஆன்மாவிற்கு இயற்கைக் குணம் தயை. ஆன்மாவின் இயற்கை என்பதே தர்மத்திற்குப் பொருள். ஆன்மா இயற்கையோடு இருந்தால் சிவமாகலாம்.

இதைப் பலவாக தர்மம் என்று பெயரிட்டார்கள். அருள்வெளியாகிய ஆன்மா இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவது உண்மை. இதற்கு வேதாகமங்களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில:-

அருட்சத்தி, அருள்வெளி, விருஷபம், தர்மதேவதை, அனாதி இயற்கை குணம், பரஞானம், அகரவுகரம், அருள் நடம், அன்பு, ஆன்மநெகிழ்ச்சி, ஆன்ம அசைவு, சுத்த தத்துவம், ஆன்ம அறிவின் பேதம் என இதை விரித்தார்கள்.

அருள் வடிவாய் சிவமாகியப் பின்னமன்றிப் பூரணமாய் இருப்பது நிரதிசயானந்தம். ஆனந்தமென்பது சந்தோஷம். நிரதிசயமென்பது ஆனந்தமின்மை. சீவர்களுக்குத் திருப்தி இன்பத்தை நேர்ந்தவரையில் செய்வது ஆனந்தானுபவம்.

அருள் வெளியின் வடிவாய் உண்மை என்னும் சிகாரமாகிய பதியோடு கூடி மௌனானந்தத்தில் இருப்பதே உண்மை. **தருமத்தோடு கூடியவன் தேக நஷ்டத்தை அடையமாட்டான்.**

திருச்சிற்றம்பலம்

# சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள்

நாலுரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்தருணம் இதுவே – வள்ளலார்

**சு**த்த சன்மார்க்கத்திற்கு முக்கிய தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்.

மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும்.

அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக் கொள்ள மாட்டார்கள். அருள் விளங்கும் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெறமாட்டார்கள்.

**...திருச்சிற்றம்பலம்...**

# நித்திய ஒழுக்க விதி

குறித்து உரைக்கின்றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின் – வள்ளலார்

1. **நி**த்தியம் சூரியோதயமாக 5 நாழிகைக்கு (2 மணி நேரம்) முன்பே நித்திரை நீங்கி எழுந்திருத்தல்.
2. எழுந்தவுடன் சற்றுநேரம் செவ்வையாக உட்கார்ந்து கடவுளை ஊன்றி நினைத்து எழுதல்.
3. அங்ஙனம் எழுந்து சிறிதும் தாமதியாமல் மௌனமாகச் சிறிது தூரம் நடந்து எவ்விடத்தில் மலஜல உபாதி நேரிடுகிறதோ அவ்விடத்தில் அப்பொழுதே ஒன்றும் சேஷ்டையில்லாமலும் விரைவில்லாமலும் இருந்து அறவிடுதல்.
4. பொற்றலைக்கையாந்தகரை (மஞ்சள் கரிசாலை) அல்லது கரிசலாங்கண்ணி (வெள்ளை கரிசாலை) இவைகளில் ஒன்று கொண்டு உள்ளே சிறிது சாரம் போகவும் கபநீர் பித்தநீர் வெளியாகவும் தந்தசுத்தி (பல்சுத்தம்) செய்தல்.
5. பின்பு ஏகாந்தமாக ஓரிடம் பற்றியிருந்து சூரியோதயமாகிற வரையில் கடவுளைத் தியானம் செய்து கொண்டிருத்தல்.

6. உதயம் தொடங்கி சுமார் சாம பரியந்தம் தக்க முயற்சியோடு பழகுதல்.
7. காலையில் உண்ணாமல் சுமார் 15 நாழிகைக்கு (12 மணிக்கு) உண்ணுதல்.
8. காலையில் சூரியோதயம் ஆனவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக் கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னாரி, கடுக்காய், மிளகு, அறுகம்வேர் இவைகளில் யாதாயினும் ஒன்றைப் பசும்பாலில் சுத்திசெய்து சூரணமாக்கிக் கொண்டு சர்க்கரையில் கலந்தாவது அல்லது சூரணமாகவாவது பசும்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.
9. சுமார் 15 நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது, முன் புசித்த போஜனம் முழுதும் ஜீரணித்ததை நன்றாக ஊன்றி அறிந்து பின்பு ஜீரணித்த அக்கணமே விருப்பால் ஏறாமலும் வெறுப்பால் குறையாமலும் தராசு முனைபோல் அளவறிந்து அந்த அளவின்படி அதிக விரைவும் அதிக தாமதமும் இல்லாதபடி சமமாகப் புசித்தல்.
10. புசிப்பில் பச்சரிசி சாதம், பசும்பால், பசுநெய், முருங்கை, கத்தரி, முள்ளி, தூதுளை முதலிய இளங்காய்; பொன்னாங்கண்ணி, தூதுளை முதலிய இளங்கீரை இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே அரைக்காற் பங்கு, வெந்தயம் காற்பங்கு, (வறுத்த) புளி வீசம் பங்கு, (வறுத்த) உப்பு வீசம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு சேர்க்கப்பட்ட கறியமுது, குழம்பு, ரசம் முதலானவைகளைக் கொண்டு பெருங்காயம், வெங்காயம், வெள்ளைப் பூண்டு முதலானவைகளைத் தள்ளிப் புசித்தல்.
11. புசித்தபின்பு மத்தியானம் தொடங்கி 25 நாழிகை (10 மணி நேரம்) பரியந்தம் சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், பிறர்க்கு விசேஷம் கேளாதவகை படித்தல், மெல்லெனப் பேசல் இவையன்றி நல்ல நினைப்போடிருத்தல்.
12. காலை, மத்தியானம், சாயங்காலம் இப்பொழுதுகளிலும் மத்தியிலும் நித்திரை செய்யாதிருத்தல்.
13. அடிக்கடி தாகநீர் குடியாமல், போஜனம் செய்த பின்பு ஒருதரமாக இளஞ்சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு குளிர்ந்த ஜலம் சிறிதும் கொள்ளாது தள்ளுதல்.
14. மத்தியானத்தில் சுமார் 5 நாழிகை (2 மணி) பரியந்தம் செவ்வையாக ஓரிடத்திலிருந்து மனத்தை ஒருவழிப்படுத்தித் தெய்வ சிந்தனையோடு இருத்தல்.
15. காலைப்புணர்ச்சி, பகற்புணர்ச்சி, அந்திப்புணர்ச்சி, இரவு முன்பங்கு புணர்ச்சி, காலை போஜனம், அந்தி போஜனம் முதலானவை இல்லாதிருத்தல்.
16. சாயங்காலத்திலும் 5 நாழிகை யாதொரு முயற்சியும் இல்லாமல் ஓரிடத்தில் அசையாதிருந்து தியானித்தல்.

17. இரவில் 10 நாழிகைக்குள் மத்தியான போஜனத்திற்கு அரைத்தரமாகப் புசித்தல்.

18. அதற்குமேல் இராத்திரி 15 நாழிகை பரியந்தம் மனத்தையடக்கித் தியானித்திருத்தல்.

19. 15 நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை பரியந்தம் மெல்லெனத் தூங்கல்.

20. படுத்து விழிக்கின்ற பரியந்தம் இடக்கை கீழிருக்கச் செய்தல்.

21. ஆகாரம் அரை (1/2), நித்திரை அரைக்கால் (1/8), மைதுனம் வீசம்(1/16), பயம் பூஜியம்(0) ஆகப் பெறுதல்.

திருச்சிற்றம்பலம்

அருள்நெறி
ஒன்றே
தெருள்நெறி
மற்றெலாம் இருள்
நெறிஎன எனக்கு
இயம்பிய சிவமே

ஆன்மீகத்தில் தாகம் கொண்ட சாதகன் அவசியம்
அறிந்து கொள்ள வேண்டிய உண்மைப் பொது நெறி

## அருள் நெறி



கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக் கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை யுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற் கொத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத்தன்மையான அருள் பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது? காண்பார் காணுமிடம் காணப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம், கருதுவார் கருதுமிடம் கருதப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம் முதலியவாய் விளங்கும்.

### இவ்வண்ணம் விளங்கும் அருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன?

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியோரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

**நன்மை தீமை என்பவை யாவை?** நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

**புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறடைகின்றன?**

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மையடையும். அவையாவன;

**மனத்தினால் வரும் பாவம்**

1. பிறர் மனைவியை தனதாக நினைத்தல்.
2. அன்னியருடைய சொத்தை கிரகிக்க நினைத்தல்.
3. அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல்.
4. முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல்.

இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள்.

**வாக்கினால் வரும் பாவம்**

1. பொய்சொல்லல்.
2. புறங்கூறல்.
3. கோட்சொல்லல்.
4. வீணுக்கழுதல்.

இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள்.

**தேகத்தினால் வரும் பாவம்**

1. பிறர் மனைவியை தழுவுதல்,
2. புசிக்க தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல்,
3. அன்னியர்களை இம்சை செய்தல்,
4. தீங்குசெய்கின்றவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்

இந்நான்கும் தேகத்தாலுண்டாகும் பாவங்கள்.

**மனத்தினால் வரும் புண்ணியம்**

1. அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்,
2. பொறாமை அடையாதிருத்தல்,
3. அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்,
4. தனது மனைவியை தவிர அன்னியமான பெண்களைத் தாய், சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்

இவை நான்கும் மனத்தால் வரும் புண்ணியங்கள்.

**வாக்கினால் வரும் புண்ணியம்**

1. பொய்சொல்லாமை,
2. கோட்சொல்லாமை,
3. இன்சொல்லாடல்,
4. தோத்திரம் செய்தல்

இவை நான்கும் வாக்கினா லுண்டாகும் புண்ணியங்கள்.

**தேகத்தினாலுண்டாகும் புண்ணியங்கள்**

அன்னியர்களுக்கு தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல்.

இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.

**அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்?**

அறிந்து பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாட்சண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப்பட்டுப் பெரியோர்களையடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி; யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயஞ் செய்தால் நீங்கும். மேலும் சத்தியற்றவர்களாயும், வார்த்திகர்களாயும் உள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும் மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

**அறியாத பாவங்கள் யாவெனில்,** நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவாங்களாம். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

**பிராயச்சித்தம் முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களாலடையுங் கதியென்ன?**

மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீரமுண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரமுண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.

**வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை, நாம் சர்வசாக்ஷி" என்கின்றார்களே. அஃதென்ன?**

தேகவாசனை, இந்திரியவாசனை, கரண வாசனை, பிராண வாயுவின் செயற்கையிலுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல், நிவாத தீபம் போல் விளங்கும் ஜீவன்முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் (சமமாகக்) காண்பார்கள். அத்தன்மை உடைய நித்திய முத்த சுத்த ஞான தேக சித்தர்கட்குப் பாவ புண்ணியம் இல்லை என்று அவர்கள் சொல்ல வேண்டியதில்லை. நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும், அசுத்தப் பொறியாயும், அசுத்தக் கரணமாயும், அசுத்த அனுபவமாயும், அசுத்த அறிவாயும் இருப்பதுபோல் இரா. தத்தபடத்தைப் போல் காரியத்தில் இலதாயும், காரணத்தில் உளதாயும் அறிவே வடிவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய்,

திருநெறி ஒன்றே அதுதான் சமரச சன்மார்க்க
சிவநெறி என்று உணர்ந்து உலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண்டு அருளமுதம் அளித்து
வல்லப சத்திகள் எலாம் வழங்கிய ஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளம் கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந்து உழலாதீர் கலக்கம் அடையாதீர்
கண்மையினால் கருத்து ஒருமித்து உண்மை உரைத்தேனே

– திருஅருட்பா; ஞானசரியை

காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதிசீக்கிரம் பற்றுதல்போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால் சுத்தமாதி மூன்று தேகசித்தியும் அத்தருணமே வரும். பக்குவமில்லாதவர்க்கு அருள் செய்தாலும் வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத்துவேஷாதி அசுத்தங்களை (விருப்பு வெறுப்புக்களை) போக்கிக் கொள்வது உத்தமம். – திருஅருட்பா வசனபாகம்

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

Advertisement


# மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்
BNS

# eXS Lending Library
## எக்சஸ் வாடகை நூலகம்
### Books for All Ages

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

HABITUAL READER

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

## Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

அகல் என்பது தேகம், எண்ணெய் — இரத்தம், திரி — சுக்கிலம், பிரகாசம் — ஆன்மா. ஆதலால் மேற்குறித்த தீபத்தினது திரியைத் தூண்டி விட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா இடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில், வண்டு, மூஷிகம், பூனை, முதலிய அஜாக்கிரதையாலும் மேற்படி தீபம் நஷ்டமாகும்.

புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்தி விசாலத்தால் மேற்குறித்த அஜாக்கிரதையின்றி தகளிக்குச் சூடேறாமலும், எண்ணெயில் அழுக்கு ஏறாமலும், வர்த்தியில் தூசு, இறுகல், தளர்ச்சி, பருமன் இவைகளில்லாது சிறு திரி போட்டு அடிக்கடி தூண்டாமல் தீபத்தை மற்றொரு தினமும் இருக்கச் செய்விப்பான். மேற்குறித்த குற்றங்களோடு தீபம் ஏற்றினால் பதினைந்து வினாடி அல்ல கணம் இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால் பதினைந்து நிமிஷத்திற்கு ஒருவிசை சிட்டம் கட்டும். விசேஷ அறிவுடையவன் மேற்குறித்த லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத்தகளியில் மேற்குறித்த தீப உபகரணங்களைத் திராவகமாக்கி சுத்தாக்கினியால் பிரகாசம் உண்டாக்குவான். அப்போது சிட்டமும் பிரகாச நஷ்டமும் நேரிடாது.


ஆதலால் நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி அடிக்கடி பெண்ணிடத்தாகிலும் வேறு தந்திரத்தாலாயினும் செலவு செய்துவிட்டால் திரிபோய் ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாய்விடும். தொள்ளாயிரத்து அறுபது நாழிகை (16 நாளு)க்கொருதரம் தேகசம்பந்தம் செய்து ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். இது மந்தனுக்கு. அதிதீவிர பக்குவியாய் மேற்குறித்த வண்ணம் கடவுளிடத்தில் இலக்ஷியமும் ஜீவர்களிடத்தில் தயவும் உடையவனுக்கு சிட்டம் போன்ற சுக்கில ஆபாசம் நேரிடாது; தேகம் நீடிக்கும்.

**நம்மை நஷ்டம் செய்வன நான்கு:**

*1. ஆகாரம், 2. நித்திரை, 3. மைதுனம் (உடல் உறவு), 4. பயம். இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இந்த நான்கினும் முக்கியமானவை ஆகாரம், மைதுனம். ஆதலால் இவ்விரண்டிலும் அதனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.*

திருச்சிற்றம்பலம்

# சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்



நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன:

1. ஏமசித்தி
2. சாகாக் கல்வி
3. தத்துவ நிக்கிரகம் செய்தல்
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்

இவற்றைப் பெறுவதற்கு ஒழுக்கங்கள் நான்கு. அவையாவன:

**1. இந்திரிய ஒழுக்கம்:**

இஃது கன்மேந்திரிய ஒழுக்கம், ஞானேந்திரிய ஒழுக்கம் என இருவகைப்படும்.

1. கொடிய சொல் செவி புகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்.
2. அசுத்த பரிசமில்லாது தயா வண்ணமாகப் பரிசித்தல்.
3. குரூரமாகப் பாராதிருத்தல்.
4. ருசி விரும்பாதிருத்தல்.
5. சுகந்தம் விரும்பாதிருத்தல்.
6. இன்சொல்லாடல்.
7. பொய் சொல்லாதிருத்தல்.
8. ஜீவ ஹிம்சை நேரிடுங்காலத்தில் எவ்விதத் தந்திரத்தினாலாவது தடை செய்தல்.
9. பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்.
10. ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்.
11. நன் முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்.
12. மித ஆகாரஞ் செய்தல்.
13. மித போகஞ் செய்தல்.
14. மலஜலோபாதிகளைக் கிரமமாய் கழித்தல்.

15. காலபேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடைநேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்த பரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத்யான சங்கற்பத் தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்.

16. (மந்தத்தரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரம அதிக்கிரமத்தில் விடாது நிற்றல்.

17. (தீவிரத்தரனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமல் நிறுத்தல்.

18. இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்.

19. இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்.

20. சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்.

21. அழுக்காடை யுடுத்தா திருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கம்.

**2. கரண ஒழுக்கம்**:-

1. மனதைச் *சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்.
2. துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்.
3. ஜீவதோஷம் (பிறர் குற்றம்) விசாரியாதிருத்தல்.
4. தன்னை மதியாதிருத்தல்.
5. இராகாதி (விருப்பு வெறுப்புகளை) நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்.
6. பிறர் மீது கோபியாதிருத்தல்.
7. தனது சத்துருக்களாகிய தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் முதலியன கரண ஒழுக்கம்.

**3. ஜீவ ஒழுக்கமாவது**:-

ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்.

**4. ஆன்ம ஒழுக்கமாவது** :-

யானை முதல் எறும்பு ஈறாகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும் அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேத மற்று எல்லாந் தானாக நிற்றல் ஆன்ம ஒழுக்கம்.

இத்துடன் இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், ஜெப தபஞ் செய்தல், தெய்வம் பராவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல், - முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி நிற்றல் வேண்டும்.

இவ்வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும். ஒருமை என்பது தனது அறிவு, ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும்; மற்ற இடத்தில் தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது, அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்றல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

# சுத்த சன்மார்க்க சாதனம்

சத்விசாரம்
பரோபகாரம்

**பரோபகாரம் என்பது** தேகத்தாலும், கரணத்தாலும், இந்திரியத்தாலும், திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல். திரவியம் நேராத பட்சத்தில் திரிகரண சுத்தியாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் ஜீவர்களினது வாட்டத்தைக் குறித்தும் பிரார்த்தித்தல்.

**சத்விசாரம் என்பது** கடவுளினது புகழையும் ஆன்மாவின் தரத்தையும், நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது. சிவானுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு மார்க்கம் தவிர வேறில்லை.

மேலும், தயவென்பது இரண்டு வகைப்படும். யாவெனில் கடவுள் தயை. ஜீவ தயை.

**கடவுள் தயை என்பது** இறந்த உயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பட்சி ஊர்வனவாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி அருட்சத்தியால் ஊட்டிவைத்தல், சோம சூரிய அக்கினிப் பிரகாசங்களைக் கால தேச வண்ணம் பிரகாசம் செய்வித்தல், பக்குவிகளுக்கு அனுக்கிரகித்தல், அபக்குவிகளை செய்ய வேண்டிய அருள் நியதியின்படி தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்தல்.

**ஜீவ தயை என்பது** தன் சத்தியின் அளவு உயிர்க்கு உபகரித்தல் அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமாய் இருத்தல்.

திருச்சிற்றம்பலம்

உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச் சிவமே – அகவல்

# சன்மார்க்கப் பெரும்பதி வருகை

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலம் தொட்டு அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசார பேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம்.

இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல.

இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி.

இது உண்மையாயின் அந்த பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையும் இல்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள் அஞ்சவேண்டாம்.

# மகாமந்திரத் திருவாக்கியம்

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திரத் திருவாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய் அறிவின்கண் அனுபவித்து எழுந்த உண்மையறிவு அனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன் குறிப்பிக்கின்றேன் குறிப்பிப்பேன்.

நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**


என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்

தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்தமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். சுத்த மாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால் அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால் கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் **இக்காலமே சன்மார்க்கக் காலம்.**

திருச்சிற்றம்பலம்

## ஞானசபையும் நடராஜரும்




ஒரு பொருளினது நாம ரூப குணக்குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாம ரூபத்தையும், குணக் குற்றங்களையும் விசாரித்து அறிதல் கரணக் காட்சி, கரண அறிவு. அதன் பிரயோஜனத்தை அறிதல் ஜீவக்காட்சி ஜீவஅறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்மக் காட்சி ஆன்ம அறிவு.

ஞானசபை என்பது ஆன்மப்பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகின்றது.


## ஆன்மாவும் ஏழு திரைகளும்

இந்தப் பவுதிக உடம்பில் இருக்கின்ற நீ யாரெனில் நான் ஆன்மா, சிற்றணு வடிவினன். மேற்படி அணு கோடி சூரியப் பிரகாசமுடையது. லலாடஸ்தானம் இருப்பிடம். கால்பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய ஏழு திரைகளுண்டு. அவையாவன:

1. கறுப்புத் திரை - மாயாசத்தி அசுத்த மாயா சத்தி
2. நீலத்திரை - சுத்தாசுத்த மாயாசத்தி
3. பச்சைத்திரை - கிரியா சத்தி
4. சிவப்புத்திரை - பராசத்தி
5. பொன்மைத்திரை - இச்சாசத்தி
6. வெண்மைத்திரை - ஞானசத்தி
7. கலப்புத்திரை - ஆதிசத்தி



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். தங்கள் நன்கொடைக்கு **80G** பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | -ரூ.2,000/- |
| காலை அன்னதானதிற்கு | -ரூ.2,500/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | -ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.6,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | -ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15 லிட்டர்/ | -ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

## Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

## Please donate through:

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## Please send MO to:

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**+91 9487454688**

# அறக்கட்டளையின் செயல்பாடுகள்





தினசரி அன்னதானம் கோசாலை

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக நடத்தப்படும் தியானப் பயிற்சி வகுப்புகள்









1. அருள் பூரண சித்தி யோகம் – 1 நாள் தியான முகாம்
2. பஞ்ச சுத்தி கிரியா – பஞ்சசுத்தி முறையுடன் 3 நாள் தியான முகாம்
3. ஆழ்நிலை தியான முகாம் – 3 நாள் மௌன தியான முகாம்
4. தினசரி சாதுக்களுக்கு போஜனம், ஏழை எளியோர்களுக்கு கஞ்சி வார்த்தல்.


## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

சன்மார்க்க ஆன்மிக மாத இதழ்

ஆண்டு சந்தா ரு.120

5 வருட சந்தா ரூ.600/–

தொடர்புக்கு: 8012680865

www.vallalarmission.org

vallalartrust@gmail.com

www.facebook.com/vallalarmission

Vallalarmission. Cell no: +91 99427 76351



Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly January 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C.JC3/74857/06
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## சுத்த சன்மார்க்க சத்திய ஞானாச்சாரம்

கடவுள் சர்வ ஜீவதயாபரர். சர்வ வல்லபமுடையவர் ஆகையால் அவர், நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய 'அருள்' விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் 'கடவுள் விளக்கம்' விசேஷமாய் இருக்கும் மற்றயர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக்காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் தயையும் செலுத்த வேண்டும்.

எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பக்தியாம். ஜீவகாருண்யமுண்டானால் அருளுண்டாகும், அருளுண்டானால் அன்புண்டாகும், அன்புண்டானால் சிவானுபவமுண்டாகும்.

திருஅருட்பிரகாச வள்ளலார்

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604, Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865